**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி**
**அசல் வழக்கு எண். 189/2012**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | செந்தில் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | பச்சமுத்து (எ) பச்சியண்ணன் | தொழில் | .. | விசைதறி |
| வயது | .. | 33 | ஜாதி | .. | வன்னியர் |
| கிராமம் | .. | சுண்டமேட்டுர் | நாள் | .. | 02.03.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. செந்தில் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 – செந்தில் - 4 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

எனது தாயார்தான் இரண்டாவது பிரதிவாதி என்றால், சரிதான். எனது தகப்பனாரின் பாகத்தில் நானும், எனது சகோதரர்களும் பங்கு கேட்கிறோம் என்றால், சரிதான். எனது தகப்பனாரின் பங்கில் உங்கள் அம்மாவிற்கு பங்கு உண்டா என்றால், அவருக்கு எந்த பங்கும் இல்லை. எனது தாயாருக்கும் வழக்கு சொத்தில் பங்கு வேண்டும் என்று எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்று சொன்னால், சரிதான். எனது தாயாருக்கு எந்த பங்கும் கேட்காத நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. மூன்றாம் பிரதிவாதிக்கு எங்கள் தாத்தா எங்களுக்கு சேர வேண்டிய சொத்துக்களை கொடுக்காமல் விற்றுவிட்டார் என்பதுதான் எங்கள் வழக்கு என்று சொன்னால், சரிதான். பாலு என்பவர் எனது தாத்தா விற்ற சொத்தில் ஒரு பகுதியை 4 ஆம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார் என்பதுதான் எங்கள் வழக்கு என்று சொன்னால், சரிதான். பாலுவுக்கு உங்களது தாத்தா குமாரக்கவுண்டர் எவ்வளவு நிலத்தை விற்றார் என்று சொன்னால், 47 செண்ட் நிலத்தை விற்றுவிட்டார். பாலு தான் வாங்கிய 47 செண்ட் நிலத்தில் 21 செண்ட் நிலத்தை 4 ஆம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார் என்று சொன்னால், சரிதான், அது சட்டப்படி செல்லாது. பாலு எனது தாத்தாவிடம் வாங்கிய சொத்தில் ஒரு பகுதியை எனது தாயாரான 2 ஆம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார் என்று சொன்னால், சரிதான். பாலு எனது தாயாருக்கு விற்பனை செய்தது சரியா தவறா

என்று சொன்னால், அதுவும் தவறு. பாலு எனது தாயாருக்கு விற்ற சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால், நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். உங்கள் தாத்தா பாலு என்பவருக்கு விற்ற கிரையப்பத்திரத்தை, எனது தாயாருக்கு விற்ற கிரையப்பத்திரத்தை செல்லாதது என்று கோரி எந்த பரிகாரமும் இந்த நீதிமன்றத்தில் கேட்கவில்லை என்று சொன்னால், சரிதான். உங்கள் தாத்தா விற்ற சொத்தில் எங்களைப்போல் அவருக்கும் அந்த சொத்தில் ஒரு பங்கு இருந்தது என்று சொன்னால், சரிதான். எனது தாத்தா அவருக்குரிய பங்கை விற்றது தவறில்லை என்று சொன்னால், சரிதான். எனது தாத்தா அவருடைய பங்கை மூன்றாம் பிரதிவாதிக்கு விற்றதை தவறு என்று சொல்ல முடியாதபட்சத்தில் அந்த சொத்தையும் இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்த்து தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால், சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி எனது தகப்பனாருடன் பிறந்தவர் என்று சொன்னால், சரிதான். இந்த வழக்கு சொத்தில் அவருக்கும் பங்கு உண்டா என்றால், உண்டு. 1 ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு பங்கு உரிமை உள்ளது என்று சொன்னால், எங்கள் தாத்தா சொத்தில் 1/2 பங்கு உரிமை உள்ளது. உனது தாத்தா 1 ஆம் பிரதிவாதிக்கு அவருடைய சொத்திலிருந்து நிலம் விற்றுள்ளாரா என்றால், விற்றுள்ளார். எவ்வளவு நிலம் விற்றுள்ளார் என்றால், 41-1/2 சென்ட் நிலம் விற்றுள்ளார். அந்த நிலம் என்னிடம் காட்டப்படும் பத்திரத்தின்படிதான் விற்றுள்ளார். 29.08.2008 தேதியிட்ட கிரையப்பத்திரம், பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தாத்தா 1 ஆம் பிரதிவாதிக்கு விற்றது செல்லுமா, செல்லாதா என்று சொன்னால், அது செல்லாது. உங்கள் தாத்தா 1 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது குறித்து உங்கள் வழக்குரையில் கூறியுள்ளீர்களா என்றால், இல்லை. அவ்வாறு விற்றது செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளீர்களா என்றால், இல்லை. உங்கள் தாத்தா உங்கள் தாயாருக்கு விற்பனை செய்தது சம்பந்தமான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. 1 ஆம் பிரதிவாதி அழகப்பனுக்கு விற்பனை செய்த சொத்தில் எனது பாட்டனாருக்கு சொந்தமான பங்கை விற்றதை தவறு என்று சொல்லமுடியாது என்று சொன்னால், சரிதான். எனது தாத்தா அவருடைய அப்பா சொத்தை விற்று அன்றைய தினமே தாவா சொத்தை வாங்கினார் என்று சொன்னால், சரிதான். எனது பாட்டனாருக்கு அவருடைய தகப்பனாரிடமிருந்து கிடைக்கப்பெற்ற சொத்து சுயராஜ்ஜித சொத்து என்று சொன்னால், சரியல்ல, அது பூர்வீகமாக வந்த சொத்துதான். எனது தாத்தா சொத்தை விற்கும்போது அவருடைய தகப்பனார் சொத்தைத்தான் விற்றதாக எழுதியுள்ளார் என்று சொன்னால், தவறு.

வா.சா.ஆ.1 இல் பூர்வீக சொத்து என்று சொல்லாமல், பிதுர்ராஜ்ஜிதமாய் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். உங்களது பாட்டனாருக்கு பரம்பரையாக சொத்து வந்தது என்று ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. வழக்கு சொத்து உங்கள் பாட்டனாருக்கு சுயராஜ்ஜித சொத்து என்றாலும், அதை அவர் மூன்றாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய உரிமை உள்ளது என்றாலும், சரியல்ல. 4 ஆம் பிரதிவாதி 3 ஆம் பிரதிவாதியிடம் இருந்து வாங்கிய கிரையம் செல்லும் என்று சொன்னால், சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்து சரியானது அல்ல என்றாலும், கேட்டுள்ள பங்கின் விகிதாச்சாரம் சரியல்ல என்று சொன்னால், சரியல்ல. 4 ஆம்பிரதிவாதி கிரையம் பெற்றது சட்டப்படி செல்லும் என்றாலும், அது குறித்து நான் கேள்வி கேட்க எந்த உரிமையும், அருகதையும் இல்லை என்று சொன்னாலும், சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமான பட்டா ஆவணம் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. 4 ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ள விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு சொத்திற்கு 4 ஆம் பிரதிவாதிதான் நிலவரி செலுத்தி கந்தாய ரசீது பெற்று வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. நீங்கள் வரி செலுத்தி வருகிறீர்களா என்றால், இல்லை. இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / செந்தில்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.